மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 482, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

482—

அருங்காட்சியகம்

***28246—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாவட்டத்தில் தொல்லியல் துறை மூலமாக அருங்காட்சியகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூர் மாவட்டத்தில் தொல்லியல் துறைமூலம் அருங்காட்சியகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தில் தொல்லியல் துறை சார்ந்த கொடுமணல்

பகுதியில் சுமார் 100 ஏக்கர் பகுதியில் அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 5,000 ஆண்டுகளுக்கு முந்தைய எழுத்துகள் உள்ள பானைகள் அங்கே கிடைத்திருக்கின்றன. அதேபோல் காங்கேயம் பகுதியில் 10 இடங்களிலும் உடுமலை கொங்கல் நகர் உட்பட 4 இடங்களிலும் அகழ்வாராய்ச்சி செய்வதற்கான இடங்கள் உள்ளன. கிட்டத்தட்ட 300 ஏக்கர் பரப்பில் இது உள்ளது. இவற்றை சேகரித்து திருப்பூர் மாவட்டத்தில் தொல்லியல் துறை சார்பில் அருங்காட்சியகம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொல்லியல் துறையானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழ்வாய்வு செய்து அங்கு கிடைக்கும் தொல்லியல் பொருட்களைக் கொண்டு அப்பகுதி மக்கள் அறியும்வண்ணம் அவ்வூரிலே அகழ்வைப்பகம் அமைத்து வருகிறது. மேலும், தொல்லியல் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வரும் வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள், தஞ்சை அரண்மனை, மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை ஆகிய இடங்களில் அகழ்வைப்பகங்கள் அமைத்துள்ளன. திருப்பூர் மாவட்டத்தின் அருகில் உள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொல்லியல் துறையின் அகழ்வைப்பகம் ஒன்று இயங்கி வருகிறது. ஆகவே, இதற்கான வாய்ப்புகளும், சாத்தியக்கூறுகளும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *இந்த மாவட்டத்தில் கல்வெட்டுகள், சுவர் ஓவியங்கள், இவையெல்லாம் ஏராளமாக இருக்கின்றன. இந்த மாவட்டத்திற்கென்று எந்த அருங்காட்சியகமும் இல்லை. இவற்றைக் கவனத்தில்கொண்டு அமைச்சர் அவர்கள், ஆய்வு செய்து, இதுகுறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

[2013 மே 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 14 அகழ்வைப்பகங்கள் உள்ளன. அவற்றிலே தேனிசைக்கோட்டையில் நாகப்பட்டினத்திலும்,*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *ஆழ்கடல் அகழ்வைப்பகம் நாகப்பட்டினத்திலும், கங்கைகொண்ட சோழபுரம் அரியலூரிலும், ராமலிங்கவிலாஸ் இராமநாதபுரத்திலும், ஆற்காடு அகழ்வைப்பகம் வேலூரிலும், வரலாற்று முந்தைய கால அகழ்வைப்பகம் திருவள்ளூரிலும், திருமலைநாயக்கர் அரண்மனை மதுரையிலும், இராஜராஜன் அகழ்வைப்பகம் தஞ்சாவூரிலும், மராட்டா அகழ்வைப்பகம் தஞ்சாவூரிலும், கரூர் அகழ்வைப்பகம் கரூரிலும், கோயம்புத்தூர் அகழ்வைப்பகம் கோயம்புத்தூரிலும், குற்றாலம் அகழ்வைப்பகம் திருநெல்வேலியிலும், திருக்கோவிலூர் அகழ்வைப்பகம் விழுப்புரத்திலும், தருமபுரி அகழ்வைப்பகம் தருமபுரியிலும் சீரிய முறையிலே செயல்பட்டுவருகின்றன. திருப்பூர் மாவட்டத்தில் தொல்பொருள் கிடைக்கக்கூடிய வரலாற்றுச் சான்றுகள், பிருங்கால ஈமச் சின்னங்கள், கல்வெட்டுகள் மற்றும் மணல்மேடுகள் கிடைக்கப்பெற்றால் எதிர்காலத்தில் துறை கருத்தாய்வு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவை பரிசீலிக்க வாய்ப்பு இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 483, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*